1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: " இன்று (2.2.1980) பகல் சுமார் 12·50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்கள் எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள....

(1) சென்னை, புளியந்தோப்பு, பார்டிசன் லைன் 104-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. எஸ். எம். சின்னப்பாவின் மகன் காஞ்சி சுகுமாரன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்'

(2) சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, கான்ரான்ஸ்மித் நகர், 71-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் கே. இராசாராம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும், பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் (simple imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ம் நாள் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1·38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஆ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

49. வருவாய்த் துறையில் 7.9.1971-ஆம் தேதியன்று வெளியாகி 8.9.1971-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II, பிரிவு-I-ல் (ஆங்கிலத்தில்) 2-ஆம் பக்கத்தில் வெளியான II-'/3987(b)/1971 ஆம் எண் அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 14.9.1979 ஆம் தேதியிடப்பெற்ற 2040 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

[1980 பிப்ரவரி 2

50. சி.எப்.எக்ஸ். குறிப்பின் முடிவை மாற்றி சிறப்பு வடிவத்தினை வகுக்கும் வகையில் தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து உள்துறையில் 30.10.1979 ஆம் தேதியிடப்பெற்ற 2713 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

51. இந்தியாவிலுள்ள (யு.எஸ்.எஸ்.ஆர்.) ஐக்கிய சோசலிச சோவியத் ரஷ்யாவின் வணிகப் பிரதிநிதித்துவ அமைப்பின் சென்னைக் கிளைக்குச் சொந்தமான டபிள்யூ.பி,ஜி.9683, டி.எம்.எக்ஸ்.9675 மற்றும் டி.எம்.பி.9884 ஆம் எண் வண்டிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 22.12.1979-ஆம் தேதியிடப் பெற்ற 3146 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

52. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29.11.1979--ஆம் தேதியிடப் பெற்ற 1767 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5)-ஆம்' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை .